# 1 நீதிப் பாடல்கள்

வாழ்க்கையைச் செம்மையாக்கும் சீரிய நற்கருத்துக்களைக் கொண்டவை நீதிப் பாடல்களாகும்.

## விவேக சிந்தாமணி

தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
 நுகரா மண்டுகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
 கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
 புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
 கலப்பர் கற்றோரே

**பதவுரை - மண்டுகம்** - தவளைகள், **தண் தாமரையின் உடன் பிறந்தும்** - குளிர்ச்சி பொருந்திய தாமரையுடன் தண்ணீரில் ஒன்றாகப் பிறந்து அதிலேயே இருந்தாலும், **தன் தேன் நுகரா** - அத் தாமரை மலரிலுள்ள தேனை உண்பதற்கு அறியாதனவாக இருக்கும். **வண்டோ கானத்து இடை இருந்து வந்து** - ஆனால் வண்டுகளோ தாம் வாழும் காட்டிலிருந்து இங்கு வந்து, **கமல மது உண்ணும்** - அத் தாமரை மலர்த்தேனை உண்ணும், அதுபோல, பண்டு **பழகி இருந்தாலும்** - நெடுநாளும் பழகி இருந்த போதினும், **புல்லர் நல்லோரை அறியார்** - அறிவில்லார் நல்லவர்களின் உயர்ந்த குணங்களை அறிய மாட்டார்கள். **கற்றோர் அங்கு கண்டு** - அறிவுடையோர் நல்லோரின் குணங்களைத் தாம் பார்த்தபோதே தெரிந்து, **களித்து உறவு ஆடி** - மகிழ்ந்து உறவுகொண்டு, **தம்மின் கலப்பர்** - தம்முடன் ஒருங்கு சேரக் கொண்டு கலந்து வாழ்வர்.

**பொழிப்புரை** - மேன்மக்களின் குணங்கள் எவ்வளவு நாட்கள் பழகியிருந்தாலும் அறிந்துகொள்ள இயலாமலே அறிவிலார் வாழ்வர். அதனால், அவர்களால் அடையும் பயனும் அவர்கட்குக் கிட்டாது போய்விடுகின்றது. அறிவுடை மேன்மக்களோ இவ்வறிஞர்களின் அருங்குணச் செயல்களை, அவர்களைக் கண்ட ஒருநொடிப் பொழுதில் அறிந்துகொண்டு அவர்களோடு ஒன்றுபடக் கலந்துறவாடி தாம் பெறுதற்கரிய விடயங்களைப் பெற்றுக்கொள்வர்.

## வெற்றிவேற்கை

தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெ றவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே

தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல்யானை
அணிதேர்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே

அதனால்
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
சிறியோரெல்லாம்
சிறியருமல்லர்

**பதவுரை** - *பனையின்* - **பனை மரத்தினுடைய, தேம்படு திரள் பழத்து** - *இனிமையுடைய திரண்ட பழத்திலுள்ள,* **ஒரு விதை** - *ஒரு பெரிய கொட்டை,* **வான் உற ஓங்கி** - *ஆகாயத்தைப் பொருந்த உயர்ந்து,* **வளம்பெற வளரினும்** - *செழுமையுற (மரமாக) வளர்ந்தாலும்,* **ஒருவற்கு இருக்க நிழல் ஆகாது** - *(அம்மரம்) ஒருவனிருப்பதற்கு நிழல் தராது.*

**அதனால்** - *அந்நியாயத்தால்,* **பெரியோரெல்லாம் பெரியருமல்லர்** - *பெரியோரெல்லாம் பெரியவருமல்லர்,* **சிறியோரெல்லாம்** - *(உருவில்) சிறியவரெல்லாம்* **சிறியருமல்லர்** - *(அறிவிற்) சிறியோராகார்.*

## வாக்குண்டாம்

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

**பதவுரை** - **கொக்கு** - *கொக்கு என்ற பறவை,* **மடைத்தலையில்** - *நீர் ஓடும் வாய்க்காலில்,* **ஓடும் மீன் ஓட** - *ஓடும் சிறிய மீன்களை ஓடவிட்டு,* **உறுமீன்** - *தன் உணவுக்கு ஏற்ற மீன்,* **வரும் அளவும்** - *வரும் வரையிலும்,* **வாடியிருக்கும்** - *காத்துக்*

கொண்டிருக்கும். (அதுபோல்) ***அடக்கம் உடையார்*** - தக்க நேரம் வரும் வரை அடங்கியிருப்பவரை, ***அறிவிலர் என்று எண்ணி*** - அறிவற்றவர் எனக்கருதி, ***கடக்க*** - அவரை வெல்வதற்கு, ***கருதவும் வேண்டா*** - நினைக்கவும் வேண்டாம்.

**பொழிப்புரை** - கொக்கு என்ற பறவை நீர் ஓடும் வாய்க்காலில் ஓடும் சிறிய மீன்களை ஓடவிட்டு தன் உணவுக்கு ஏற்ற மீன் வரும் வரையிலும் காத்துக் கொண்டிருக்கும். அதுபோல் தக்க நேரம் வரும் வரை அடங்கியிருப்பவரை அறிவற்றவர் எனக்கருதி அவரை வெல்வதற்கு நினைக்கவும் வேண்டாம்.

***அரும்பதவுரை***

| | |
|---|---|
| மடைத்தலை | - நீர் ஓடும் வாய்க்கால் |
| உறுமீன் | - பெரிய மீன் |
| வாடியிருக்கும் | - அடங்கி இருக்கும் |
| கடக்க | - வெல்வதற்கு |

## திரிகடுகம்

கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா வவைக்களனும் – பாத்துண்ணுந்
தன்மையிலாள ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்த லில.

**பதவுரை – *கணக்காயர் இல்லாத ஊரும்*** - ஓதுவிப்பார் இல்லாத ஊரும்; ***பிணக்கு அறுக்கும் மூத்தோரை இல்லா அவைக்களனும்*** - பிணக்கினைக் கெடுக்கும் அறிவுடையோரை இல்லாத சபையும்; **பாத்துண்ணும் தன்மையிலாளர் அயல் இருப்பும்** - பகுத்துக் கொடுத்துண்ணும் குணமில்லாதவர் பக்கத்திலிருப்பும்; ***இம்மூன்றும் நன்மை பயத்தல் இல*** - ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு நன்மை தருவனவல்ல.

***பிணக்கு*** - ஒரு பொருளைப் பற்றி இருவர்க்கு உளதாய மாறுபாடு; **பகுத்தல்** - பிதிரர், தேவர், விருந்தினர், உறவினர், தான் இவர்க்குப் பங்கிடல்

**பொழிப்புரை** - ஓதுவிப்பார் இல்லாத ஊரும் பிணக்கினைக் கெடுக்கும் அறிவுடையோரை இல்லாத சபையும் பகுத்துக் கொடுத்துண்ணும் குணமில்லாதவர் பக்கத்திலிருப்பும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு நன்மை தருவனவல்லாம்.

## முதுமொழி வெண்பா

உப்பிலாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம்போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண் டதுமா ளிகை

**பொழிப்புரை** - *அறுசுவை போல உப்பில்லாமல் காய்ச்சிய கஞ்சியினை உண்பவர்கள் போல, துவைத்த அழுக்கற்ற உடையைப் போல, ஒப்பான பனை ஓலையால் பின்னிய பாயில் படுத்துறங்குபவர் வாழ்வார். ஆகவே, மனங்கொண்டது மாளிகையாகும்.*

## நாலடியார்

யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்

**பொழிப்புரை** - *யானை போன்றவர்களது நட்பை விட்டு, நாயைப் போன்றவர்களது நட்பை தழுவிக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் யானை பல காலம் பயின்றிருந்தும் தனக்கு உணவு கொடுத்துக் காக்கும் பாகனையே கொல்லும். நாய் தன்னையுடையவன் தன்மேல் சினந்து எறிந்த ஆயுதம் தன் உடம்பில் தைத்திருக் கையிலும் அன்பின் குறியாக வாலை வளைத்து ஆட்டும்.*

## இனியவை நாற்பது

கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது

**பொழிப்புரை** - *கற்றவர்களுக்கு முன்பு தாம் கற்ற கல்வியைச் சொல்லுதல் மிகவும் இனிது. அறிவிற் சிறந்தவரை அடைதல் இனிது. தான் பிறரிடம் எள் அளவும் யாசிக்காமல் பிறருக்குக் கொடுத்து வாழ்தல் இனிது.*

**வினாக்கள்**

1. வாக்குண்டாம் பாடலில் கொக்கின் இயல்பாகக் கூறப்படுவது யாது?

2. திரிகடுகம் பாடலில் நன்மை பயக்காதவை எனக் குறிப்பிடப்படும் மூன்று விடயங்கள் யாவை?

3. நாலடியார் பாடலில் யானையின் நட்பை விட நாயின் நட்பு சிறந்ததெனக் கூறப்படுவது ஏன்?

4. இனியவை நாற்பது பாடலில் இனிதான செயல்களாகக் கூறப்படுபவை எவை?

5. அடக்கமுடைமையின் அவசியம் பற்றி எழுதுக.

6. மனங்கொண்டது மாளிகை எனும் தலைப்பில் சிறுகதை ஒன்றை எழுதுக.

7. அறிவுடையோருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வது பல்வேறு பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு கால்கோளாகும். குழுக் கலந்துரையாடல் வாயிலாக இந்த அம்சத்தை வெளிப்படுத்தும் சான்றாக அமையத்தக்க சம்பவங்களை உள்ளடக்கியதான கட்டுரை வரைக.

8. கூடா நட்பு பற்றி கட்டுரை வரைக.